StudentBounty.com

357

Register Number

**Part III**

# வணிகவியல் / COMMERCE

( Tamil Version )

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 200

## பகுதி - அ

குறிப்பு : i) அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

ii) அனைத்து வினாக்களும் சம மதிப்பெண்கள் உடையன. 40 × 1 = 40

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து உமது விடைத்தாளில் எழுதுக :

1. பின்வரும் சிறப்பியல்புகளில் எது தனிவணிகருக்கு ஏற்றதல்ல ?

அ) தனிநபர் உரிமை

ஆ) தனி மனிதக் கட்டுப்பாடு

இ) எல்லா இலாபமும் உரிமையாளருக்கு

ஈ) நெகிழ்ச்சி தன்மையற்றது.

2. தனியாள் வணிகம் துவங்க

அ) குறைந்தது இரு நபர்கள் தேவை

ஆ) குறைந்தது ஏழு நபர்கள் தேவை

இ) ஒருவர் மட்டும் தேவை.

3. தனி வணிகரின் பொறுப்பு

அ) முதலுக்கு ஏற்ப வரையறுக்கப்பட்டது

ஆ) சொத்துக்கு ஏற்ப வரையறுக்கப்பட்டது

இ) வரையறையில்லாதது.

[ Turn over

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

4. கூட்டாண்மை நிறுவனம் பதிவு செய்தல்

அ) 1949 சட்டம்

ஆ) 1956 சட்டம்

இ) 1932 சட்டம்.

5. கூட்டாண்மை உண்டாக்கப்படுவது

அ) ஒப்பந்தத்தால்

ஆ) கூட்டாளிகளிடையே உறவு

இ) அரசின் வழிகாட்டல்.

6. கூட்டாண்மையில் தோன்றும் உறவு முறை

அ) முதல்வர் மற்றும் முகவர்

ஆ) உரிமையர் மற்றும் வேலையாள்

இ) எஜமானர் மற்றும் பணியாளர்.

7. கூட்டாண்மை நிறுவனத்தில் மேலாண்மையில் அதிக பங்கு வகிக்கும் கூட்டாளி

அ) பொதுக் கூட்டாளி

ஆ) உறங்கும் கூட்டாளி

இ) இரகசியக் கூட்டாளி

8. நிறுமத்தின் வாழ்வுக்காலம் முடிவுக்கு வருவது

அ) அதன் தோற்றுவிப்பாளர்கள் அனைவரும் இறந்தவுடன்

ஆ) இயக்குனரவையில் உள்ள இயக்குனர்கள் அனைவரும் இறந்தவுடன்

இ) பங்குகளை பிறருக்கு மாற்றிக் கொடுத்தவுடன்

ஈ) மேற்சொன்ன எச்சூழ்நிலையிலும் முடிவுக்கு வராது.

9. கீழ்க்கண்ட ஆவணங்களுள் எது நிறுமத்தின் செயல் எல்லையை வரையறை செய்கிறது ?

அ) அமைப்பு முறையேடு  ஆ) செயல்முறை விதிகள்

இ) தகவலறிக்கை  ஈ) சட்டமுறை உறுதிப் பிரகடனம்.

10. பங்குதாரரிடம் உள்ள பங்குகள், ஒறுப்பிழப்பு செய்வதற்கான காரணம்

அ) விண்ணப்பப்பணம் செலுத்தாமை

ஆ) ஒதுக்கீட்டுப் பணம் செலுத்தாமை

இ) அழைப்புப் பணம் செலுத்தாமை.

StudentBounty.com
www.StudentBounty.com
Homework Help & Pastpapers

11. ஒரு இயக்குனர் செயலாற்றுவது

அ) நிறுமத்தின் முகவராக

ஆ) நிறுமத்தின் பொறுப்பான்மையராக

இ) நிறுமத்தின் முதன்மை நிர்வாக அதிகாரியாக

ஈ) இவை அனைத்தும்.

12. பொது வரையறு நிறுமத்தில் ஒட்டுமொத்த மேலாண்மை ஊதியம் கீழ்க்கண்டவற்றில் எதுக்கு மிகக் கூடாது ?

அ) நிகர லாபத்தில் 11%

ஆ) செலுத்தப்பட்ட முதல் மற்றும் பொதுக் காப்பில் 11%

இ) நிகரலாபத்தில் 5%

ஈ) செலுத்தப்பட்ட முதல் மற்றும் பொதுக் காப்பில் 5%.

13. சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றக்கூடிய தீர்மானம்

அ) சாதாரண தீர்மானம்

ஆ) சிறப்புத் தீர்மானம்

இ) சிறப்பறிக்கை வேண்டும் தீர்மானம்.

14. பங்குமாற்றகம் .................... வாங்க விற்க அனுமதிக்கின்றன.

அ) ஏதாவது ஒரு நிறுமத்தின் அனைத்து வகையான பங்குகளை

ஆ) அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட பாண்டுகள்

இ) பட்டியலில் சேர்க்கப்பட்ட பத்திரங்கள்

ஈ) பட்டியலில் சேர்க்கப்படாத பத்திரங்கள்.

15. நம் நாட்டில் புதிய பங்குகளை விற்க வழக்கமாகப் பயன்படுத்தும் முறை

அ) பொதுவெளியீடு

ஆ) விற்பனைக்கான தருமொழி

இ) மேலாண்மைத் தரகர்

ஈ) ஒப்புறுதியளித்தல்.

[ Turn over

StudentBounty.com

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

16. கூட்டுப்பங்கு நிறுமத்திற்கு தேவைப்படுவது

அ) அதிக முதல்

ஆ) குறைந்த முதல்

இ) முதலே தேவையில்லை.

17. கூட்டுறவு சங்கம் தொடங்கப்படுவது

அ) கிராமங்களில் மட்டும்

ஆ) கிராமங்களிலும் நகரங்களிலும்

இ) பெரு நகரங்களில் மட்டும்

ஈ) நகர்ப்புறங்களில் மட்டும்.

18. கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களின் பங்குகள்

அ) மாற்றமுடியும்

ஆ) திருப்பி செலுத்தக்கூடியது

இ) திருப்பி செலுத்தத்தக்கதல்ல.

ஈ) இவற்றில் ஏதும் இல்லை.

19. பொதுமக்களும் இந்நிறுவனத்தின் பங்குகளை வாங்கலாம்

அ) துறைவாரி அமைப்பு ஆ) பொதுக் கழகம்

இ) அரசு நிறுமம் ஈ) இவையனைத்தும் இல்லை.

20. கூட்டுறவு சங்கத்தின் அடிப்படை நோக்கமானது

அ) இலாபமீட்டுவது

ஆ) உறுப்பினர்களுக்குச் சேவை செய்வது

இ) சமுதாயத்திற்கு சேவை செய்வது

ஈ) சமுதாயத்திற்கு தரமான பொருட்களை தருவது.

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

II. கோடிட்ட இடங்களை நிரப்புக :

21. தனியாள் வணிகத்தின் அளவு ........................ .

22. பொதுக்கூட்டுருவை ........................ எனக் கூறலாம்.

23. கூட்டாண்மை நிறுவனத்தில் இலாப நட்டம் ........................ பகிர்ந்தளிக்கப்படுகிறது.

24. வங்கித்தொழில் அல்லாத பிற தொழிலுக்கு அதிகபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை ........................ .

25. எதிர்காலத்தில் கூட்டாளிகளிடையே கருத்து வேறுபாடு ஏற்படாமல் இருக்க கூட்டாண்மைப் பத்திரம் ........................ வடிவில் இருப்பது நல்லது.

26. ஒரு பொது வரையறு நிறுமத்தின் குறைந்தபட்ச உறுப்பினர் எண்ணிக்கை ........................ .

27. ஒரு தனி நிறுமத்தின் குறைந்தபட்ச உறுப்பினர் எண்ணிக்கை ........................ .

28. ரூ. 6,000 இயல் மதிப்புடைய பங்குகளை வெளியிட்டிருக்கும் நிறுமத்தில், ஒரு இயக்குனர் வைத்திருக்க வேண்டிய தகுதிப் பங்குகளின் எண்ணிக்கை ........................ .

29. பங்குகளை அவற்றின் முக மதிப்பிற்கும் குறைத்து வெளியிடப்படுதல், பங்குகளை ........................ வெளியிடுதல் என்று கூறப்படுகிறது.

30. பங்குதாரர்கள் நிறுமத்தின் உண்மையான ........................ .

31. பங்குதாரர்கள் சார்பாக ஒரு கூட்டத்தில் கலந்துகொள்ள நியமிக்கப்படும் நபர் ........................ எனப்படுவார்.

32. கூட்டத்தில் வைக்கப்படும் முன்மொழிகை நிறைவேற்றப்படுமாயின் அது ........................ ஆகிறது.

33. முதன்மைச் சந்தையில் ........................ பங்குகளின் வணிகம் நடைபெறுகிறது.

34. முதலீட்டாளர் தம் சேமிப்பைப் பெரிய நிறுவனங்களில் முதலீடு செய்ய ........................ உதவுகின்றன.

35. பொது வரையறு நிறுமங்களுக்கு பட்டியலிடுதல் ........................ ஆக்கப்பட்டிருக்கிறது.

[ Turn over

StudentBounty.com
www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

36. கூட்டுறவு இயக்கத்தின் தந்தை ....................... .

37. வேலைப் பகிர்வு முறை என்பது ....................... ஆகும்.

38. பொதுக் கழகங்கள் மத்திய அரசு அல்லது மாநில அரசின் ....................... உருவாக்கப்படுகின்றன.

39. அரசுத் தொழில் வடிவமைப்புகளில் மிகவும் தொன்மையானது ....................... .

40. தொழிலமைப்பின் வடிவங்களில் தனியாள் வணிகம் மிகவும் ....................... .

## பகுதி - ஆ

*குறிப்பு :* i) ஏதேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்க.

ii) ஒவ்வொரு வினாவிற்கும் 4 *வரிகளுக்கு* மிகாமல் விடையளிக்க.

iii) அனைத்து வினாக்களும் சம மதிப்பெண்கள் உடையன. 10 × 4 = 40

41. அமைப்பை வரையறு.

42. வாரிய அமைப்பின் பொருள் பற்றி கூறுக.

43. வரையறாப் பொறுப்பு என்றால் என்ன ?

44. கூட்டாண்மையை வரையறு.

45. கூட்டாண்மைப் பத்திரம் என்றால் என்ன ?

46. தனி வரையறு நிறுமம் என்றால் என்ன ?

47. அயல்நாட்டு நிறுமம் என்றால் என்ன ?

48. சட்டமுறைக் கூட்டம் என்றால் என்ன ?

49. நிறுமத்தில் வாக்குரிமை எவ்வாறு செலுத்தப்படுகிறது ?

50. தகவலறிக்கை என்றால் என்ன ?

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

51. முதலீட்டாளர் என்பவர் யார் ?

52. ஒரு ஆள் ஒரு வாக்கு என்றால் என்ன ?

53. ஆதரவுப் பங்காதாயம் என்றால் என்ன ?

54. அரசு நிறுமத்தின் இலக்கணத்தை எழுது.

55. பொதுக் கழகத்திற்கு நான்கு எடுத்துக்காட்டுகள் தருக.

## பகுதி - இ

*குறிப்பு :* i) ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ii) ஒவ்வொன்றிற்கும் *ஒரு பக்க* அளவிற்கு மிகாது விடையளி.

iii) அனைத்து வினாக்களும் சம மதிப்பெண்கள் உடையன. $5 \times 8 = 40$

56. இந்துக் கூட்டுக் குடும்ப வணிகம் பற்றி சிறுகுறிப்பு வரைக.

57. கூட்டாண்மை நிறுவனத்தில் இளவரின் நிலை பற்றி விவரி.

58. நிறுமத்தின் சிறப்புத்தன்மைகளை சுருங்கக் கூறுக.

59. அமைப்பு முறையேடு என்றால் என்ன ? அதில் அடங்கியுள்ள பொருளடக்கங்கள் யாவை ?

60. சட்டமுறை அறிக்கையின் உள்ளடக்கத்தை எழுது.

61. முதலீட்டாளர், ஊகவணிகர் இவர்களுக்கிடையே உள்ள வேறுபாடுகள் யாவை ?

62. கூட்டுறவுச் சிறப்பங்காடியின் பொருள் தந்து அதன் சிறப்பியல்புகளைத் தருக.

63. பொதுக் கழகத்தின் சிறப்பியல்புகளை எழுது.

[ Turn over

StudentBounty.com
www.StudentBounty.com
Homework Help & Pastpapers

## பகுதி - ஈ

குறிப்பு : i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

ii) ஒவ்வொன்றிற்கும் *இரண்டு பக்க* அளவிற்கு மிகாது விடையளி.

iii) அனைத்து வினாக்களும் சம மதிப்பெண்கள் உடையன. 4 × 20 = 80

64. அமைப்பின் கோட்பாடுகளை சுருக்கமாக விவரி.

*அல்லது*

துறைவாரி அமைப்பின் இயல்புகளையும், நிறை குறைகளையும் விளக்குக.

65. தனிநபர் வணிகத்தின் நன்மைகள், குறைகளை விவரி.

*அல்லது*

நிறுமத்தின் பல்வேறுவகைகளை சுருக்கமாக விவரி.

66. கூட்டாண்மை நிறுவனத்தின் நன்மைகள், குறைபாடுகளை எழுதுக.

*அல்லது*

பங்குமாற்றகம் - இலக்கணம் தருக. பங்கு மாற்றகத்தின் இயல்புகள் மற்றும் பணிகளை விளக்குக.

67. இயக்குனர்களின் பணிகள் மற்றும் கடமைகள் குறித்துச் சுருக்கமாக எழுது.

*அல்லது*

கூட்டுப்பங்கு நிறுமம் மற்றும் கூட்டுறவுச் சங்கம் இடையேயுள்ள வேறுபாடுகளை எழுது.

StudentBounty.com

www.StudentBounty.com
Homework Help & Pastpapers